DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

Spl.SC.No.71/2024 & Spl.SC.No.112/2025

PROSECUTION WITNESS No - PW- 3

| | | | |
|---|---|---|---|
| Name : | கலைவாணி | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the $10^{th}$ day of March 2026.

1வது மற்றும் 2வது எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜரில்லை. அவர்களுக்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது மதுரை மாவட்ட குற்ற பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி பணி மாறுதலில் விருதுநகர் மாவட்டம் ஆம்பத்தூர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பொறுப்பேற்க இருக்கிறேன். கடந்த 18.06.2023ம் தேதி திருப்பத்தூர் நகர் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது அன்று பகல் 11.00 நிலையத்தில் சார்பு ஆய்வாளர் பொறுப்பில் இருந்த செல்வபிரவு என்பவர் நிலைய குற்ற எண்.102/2023 இதச பிரிவு 379 மற்றும் 21(1) MMDR Act படி பதிவு செய்து வைத்திருந்த முதல் தகவல் அறிக்கை மற்றும் வழக்கு கோப்பை பெற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கில் சார்பு ஆய்வாளர் TN72CA7507 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் வாகனத்தில் சுமார் 3 யூனிட் அளவுள்ள Msand மணலுடன் கூடிய வாகனத்தை ஒப்படைத்ததை பெற்று அன்று 14.00 மணியளவில் உரிய அத்தாட்சி பெற்று மேற்படி குறிப்பிட்ட சொத்தை படிவம் 91ன் மூலம் உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி படிவம் 91 **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்ட நான் வழக்கு சம்பவஇடம் குறித்து உரிய கனிம நிறுவன உதவி

பொறியாளரிடம் பெற்ற Msand மணலின் மதிப்பு சான்று **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் கைப்பற்றிய சுமார் 3 யூனிட் Msand மணலை திருப்பத்தூர் வட்டாச்சியர் அலுவலகத்தில் பெற்றுக்கொண்டதற்காக திருப்பத்தூர் வட்டாச்சியரால் வழங்கப்பட்ட ஒப்புகை ரசீது **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்ட நான் கடந்த 18.06.2023 ம்தேதி வழக்கின் குற்றவாளி மதன்ராஜ் என்பவரை திருப்பத்தூர் காவல் நிலையம் அருகில் வைத்து கைது செய்து உரிய நீதிமன்ற கவால் நிலையத்திற்கு அனுப்பி வைத்தேன். மற்றொரு எதிரி கிருஷ்ணகுமார் 22.06.2023 ல் உரிய நீதிமன்றத்தில் சரணடைந்து முன் பிணை பெற்றுள்ளார் என்பதை தெரிந்துக்கொண்டேன். மேலும் சாட்சிகள் கனிம வளத்துறை உதவியாளர் ஜெகதீசன் மற்றும் வழக்கு சம்பவத்தின் போது இருந்த ஜெகதீஸ், சாட்சிகள் சரவணன் மற்றும் மணல் மதிப்பீடு செய்த ஆனந்த மரியவளவன், சார்பு ஆய்வாளர் செல்வபிரவு ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முடிவில் கடந்த 19.07.2023 ம் தேதி இவ்வழக்கில் இதச பிரிவு 379 மற்றும் 21(1) MMDR Act குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். மேலும் இவ்வழக்கில் குவிமுச பிரிவு 200 படியான தனி நபர் புகாரை கடந்த 11.08.2025 ல் முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், திருப்பத்தூரில் தாக்கல் செய்தேன். மேற்படி குவிமுச பிரிவு 200 படியான தனி நபர் புகார் **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

இவ்வழக்கில் வழக்கு சம்பவம் குறித்து தனி நபர் யாரும் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. இவ்வழக்கின் கோப்பு புலன் விசாரணைக்காக எந்த தேதியில் எத்தனை மணிக்கு என் பார்வைக்கு வைக்கப்பட்டது என்றால் கடந்த 18.06.2023 ம் தேதி பகல் 11.00 மணிக்கு என் பார்வைக்கு வைக்கப்பட்டது. நான் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆவணங்கள் எதுவும் தயாரித்தேனா என்றால் சம்பவ இடத்திற்குச் சென்றேன் ஆனால் தனியாக ஆவணங்கள் எதுவும் தயாரிக்கவில்லை.

கனிம வளத்துறையை சார்ந்த அ.சா.1 ஜெகதீசன் என்பவர் இவ்வழக்கில் புகார் கொடுப்பதற்கு அவருக்கு உரிய அதிகாரம் உண்டு என்பதை கடிதம் மூலம் தெரிந்து கொண்டேனா என்றால் கனிம வளத்துறைக்கு அதிகாரம் உண்டு என்று தெரியும். ஆனால் கடிதம் எதுவும் அனுப்பி ஆவணம் பெறவில்லை. கனிம வளத்துறை இயக்குநருக்கு தான் புகார் கொடுக்கும் அதிகாரம் உண்டு என்றும் நான் அசா.1 தவறுதலாக புகார் பெற்று சார்பு ஆய்வாளர் பதிந்திருந்த முதல் தகவல் அறிக்கையை புலன் விசாரணை செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. கைப்பற்றிய வாகனத்தை காவல் நிலையத்திற்கு யார் ஓட்டி வந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. Msand என்பது ஜல்லிகல்லை உடைத்து அதன் தூசி மூலம் கிடைக்கும் ஒரு வகை கனிமம் என்று சொன்னால் சரிதான். பொதுவாக Msand மணல் வீட்டு உபயோகங்களுக்கு பயன்படுத்துவது உண்டு என்றால் சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட Msand ஆனது எந்த கல் உடைக்கும் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டது என்பது குறித்து விசாரணை மேற்கொண்டேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் குற்ற இறுதி அறிக்கை நான் தான் தாக்கல் செய்தேனா என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் சட்ட பிரிவு இதச பிரிவு 379 மற்றும் 21(1) MMDR Act என்று குறிப்பிட்டுள்ள நிலையில் இறுதி அறிக்கையில் சட்ட பிரிவு இதச பிரிவு 379 மற்றும் 21(4) MMDR Act என்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கின் தன்மைக்கேற்ப பிரிவை மாற்றியுள்ளேன். வழக்கின் பிரிவை மாற்றியதற்கு தனியாக அறிக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கின் பிரிவு ஆற்று மணலுக்கு போடப்படுவது என்றால் பொதுவாக இது போன்ற மண் வகையைச் சார்ந்த அனைத்து பொருட்களுக்கும் தன்மைக்கேற்ப நாங்கள் பயன்படுத்துவோம். நீர் வளத்துறையிலிருந்து பெறப்பட்ட அ.சா.ஆ.5 ல் Msand என குறிப்பிடாது மணல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது ஆய்வின் போது எந்த வகை மண் இருந்தது என்றால் Msand மண் தான் இருந்தது. புகார்தாரர் கொடுத்த புகாரை சரிவர விசாரணை செய்யாமல் எந்திர

ரீதியில் புள்ளி விவர கணக்கிற்காக இவ்வழக்கின் புலன் விசாரணையை மேற்கொண்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் 2 வது எதிரி மதன்ராஜ் என்பவரை நான் கைது செய்யவில்லை என்றும் இவ்வழக்கின் எதிரிகளுக்கும் குற்ற செயலுக்கு தொடர்பில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை.** இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.10 16:03:11 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை